சுருக்கம்

பொதுப்பணிகள் – நேரடி நியமனங்கள் – 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

மனிதவள மேலாண்மை (எம்) துறை

அரசாணை (நிலை) எண்.133

நாள். 01.12.2021,
பிலவ வருடம், கார்த்திகை -15,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது:

1. அரசுக் கடித எண்.18084/எம்2/2021, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 06.08.2021 மற்றும் 20.10.2021.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, கடித எண்.5476/பிடி-எஆர்ஒ/2018, நாள் 28.10.2021 மற்றும் 25.11.2021.

ஆணை :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் 13.09.2021 அன்று நிகழ்த்தப்பட்ட 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான உரையின் போது, பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

> "தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும்"

2. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அரசுக்கு அளித்த கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித்

....2

தேர்வுகள் அனைத்திலும், நியமன அலுவலர்களால் தேவைப்படும் நேர்வுகளில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளிலும் தமிழ் மொழித் தாளினை தகுதித் தேர்வாக கட்டாயமாக்க அரசு முடிவு மேற்கொண்டு, அவ்வாறே ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

3. மேற்படி ஆணையினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினைப் பொருத்த வரையில், கட்டாயத் தமிழ் மொழித் தேர்வு அனைத்து போட்டித் தேர்வுகளிலும் பின்வரும் வழிவகைகளில் நடத்தப்படும் :-

(1) தமிழ் மொழித் தகுதித் தாள் (Qualifying Paper), தேர்வர்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்படுகிறது.

(2) தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்புத் தரத்தில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

(3) மேற்கண்டவாறு நடத்தப்படும் கட்டாய தமிழ்மொழித் தாளில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி (Minimum Qualifying Marks) கட்டாயமாக்கப்படுகிறது. தகுதித் தாளில் தேர்ச்சி பெறாதவர்களின் இதர போட்டித் தேர்வுத்தாள் / தாட்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

**4. தொகுதி-I, II மற்றும் IIA ஆகிய இரண்டு நிலைகளைக் கொண்ட தேர்வுகளின் நடைமுறைகள் விவரம்.**

(1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற முதனிலை (Preliminary Examination) மற்றும் முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) என இரண்டு நிலைகளைக் (Two stages of Examination) கொண்டதாக உள்ள தொகுதி I, II மற்றும் IIA ஆகிய அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி தகுதித் தேர்வானது, முதன்மைத் தேர்வுடன் (Main Written Examination) விரிந்துரைக்கும் வகையிலான (Descriptive Type) தேர்வாக அமைக்கப்படும்.

(2) மேற்படி முதன்மை எழுத்துத் தேர்வானது, மொழிபெயர்த்தல், சுருக்கி வரைதல், பொருள் உணர்திறன், சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல், கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது) மற்றும் கட்டுரை வரைதல் உள்ளிட்ட தலைப்புகள் கொண்டதாக நடத்தப்படும்.

(3) இத்தேர்வு 100 மதிப்பெண்கள் கொண்டதாக அமைக்கப்படும். இத்தகுதித்தாளில் (Qualifying Paper) குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி (Minimum Qualifying marks) பெற்றால் மட்டுமே முதன்மை எழுத்துத் தேர்வின் (Main Written Examination) இதர போட்டித் தேர்வுத்தாள் / தாட்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**5. ஒரே நிலை கொண்ட (Single stage Examination) தேர்வுகளின் (தொகுதி III மற்றும் IV) நடைமுறைகள் விவரம்.**

(1) தற்போது நடைமுறையிலுள்ள பொதுத்தமிழ் / பொது ஆங்கிலம் உள்ள நேர்வுகளில், பொது ஆங்கிலத்தாள் நீக்கப்பட்டு, பொது தமிழ்மொழித் தாள் மட்டுமே மதிப்பீட்டுத் தேர்வாக அமைக்கப்படும்.

(2) அதாவது, தொகுதி III, IV போன்ற, ஒரே நிலை கொண்ட (Single stage Examination) தேர்வுகளுக்கு, தமிழ்மொழித் தாளானது, தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வாக (Tamil Eligibility – Cum – Scoring Test) நடத்தப்படும். இத்தமிழ்மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வானது 150 மதிப்பெண்களுக்கு பகுதி – அ என கொள்குறி வகையில் (Objective Type) அமைக்கப்படும்.

(3) பொது அறிவு + திறனறிவு (Aptitude) + மனக்கணக்கு நுண்ணறிவு (Mental Ability) ஆகிய பாடத்திட்டங்கள் 150 மதிப்பெண்களுக்கு பகுதி – ஆ என கொள்குறி வகையில் (Objective Type) நடத்தப்படும்.

(4) பகுதி – அ-வில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி (Minimum Qualifying Marks) பெற்றால் மட்டுமே பகுதி–ஆ-வில் எழுதிய தேர்வுத்தாளும் / இதர தாட்களும் மதிப்பீடு செய்யப்படும்.

(5) இவ்விரண்டு பகுதிகளின் (பகுதி 'அ' மற்றும் 'ஆ') அனைத்துத் தாட்களின் மொத்த மதிப்பெண்களும் தரவரிசைப் பட்டியலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**6. ஒரே நிலை கொண்ட (Single stage Examination) இதர போட்டித் தேர்வுகளின் நடைமுறைகள் விவரம்.**

(1) தற்போது நடைமுறையிலுள்ள பொதுத்தமிழ்/ பொது ஆங்கிலம் உள்ள நேர்வுகளில், பொது ஆங்கிலத்தாள் நீக்கப்பட்டு, பொது தமிழ்மொழித் தாள் மட்டுமே மதிப்பீட்டுத் தேர்வாக அமைக்கப்படும்.

(2) மேற்படி, தமிழ்மொழி தேர்வானது, பகுதி – அ என கொள்குறி வகையில் (Objective Type) 150 மதிப்பெண்களுக்கு தகுதித்தேர்வாக மட்டுமே நடத்தப்படும். தரவரிசைக்கு இம்மதிப்பெண் எடுத்துக்கொள்ளப்படாது.

(3) இத்தேர்வில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி (Minimum Qualifying Marks) பெற்றால் மட்டுமே, பகுதி–ஆ மற்றும் இதர போட்டித் தேர்வுத்தாள்/ தாட்கள் மதிப்பீடு செய்யப்படும்.

7. இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கை செய்யப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் மேற்படி தமிழ் மொழித் தாள் கட்டாயமாக்கப்படும்.

8. ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு வனத்துறை சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள இதர தெரிவு முகமைகளைப் பொருத்தவரையில், கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை நடத்துவது தொடர்பான மேற்படி வழிகாட்டு நெறிமுறைகள் சம்மந்தப்பட்ட நிர்வாகத் துறைகளால் வெளியிடப்படும்.

9. அவ்வாறே, தமிழ்நாடு அரசுப் பொதுத்துறை நிறுவனங்களைப் பொருத்தவரையில், தேவையான மேற்படி வழிகாட்டு நெறிமுறைகள் நிதி (பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையால் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மைதிலி கே. ராஜேந்திரன்**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 003.
அரசுக் கூடுதல் தலைமை செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மை செயலாளர், பள்ளிக் கல்வி துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளர், உயர்க் கல்வி துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை - 600 009.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை – 600 009.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.
தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 600 018.
தலைவர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 600 002.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், சென்னை – 600015.
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, சென்னை – 600 032.
நிதி (பொ.நி.மா.க) துறை, சென்னை – 600 009.
அனைத்து துறைத் தலைவர்கள், (தலைமைச் செயலகத் துறை வழியாக).

**நகல்:**

முதலமைச்சரின் செயலாளர் –III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சென்னை – 600 009.
மனிதவள மேலாண்மைத் துறைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை - 600 009.
மனிதவள மேலாண்மை (நி.சீ.II) துறை, சென்னை – 600 009. (3 படிகள்)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

1/12/21

**பிரிவு அலுவலர்**

1/12/21